தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 03.06.2025**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி,, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 136/B/2023**

திரு. அ. தமிழ்ராஜ் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்
(ஊராட்சிகள்),
ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார வளர்ச்சி
அலுவலகம்,
விருதுநகர் மாவட்டம் - 626 125. -- பொது அதிகார அமைப்பு

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 02.04.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு ஸ்ரீவில்லிபுத்தூர், வட்டாட்சியர் அவர்கள் களஆய்வு செய்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி, அதன் புகைப்படத்துடன் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டதைத் தொடர்ந்து, திரு.காளிராஜ், பொது தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் திருமதி.இரா.பூங்கொடி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊ), ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம் ஆகியோர் இருவரும் (03.06.2025) இன்று நேரில் ஆஜராகி, திரு.வே.பாலமுருகன், வருவாய் வட்டாட்சியர், ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் மு.தனலட்சுமி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டலம்-1), ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம் ஆகியோர் இருவரும் நேரில் களஆய்வு செய்து, ஆக்கிரமிப்புகளை அகற்றியதாக தெரிவித்து, அதற்கான GPS புகைப்படத்தினை ஆணையத்தின் பார்வைக்கு சமர்ப்பித்தார். வட்டாட்சியர், ஸ்ரீவில்லிபுத்தூர் அவர்களை நேரில் ஆஜராகும்படி ஆணையத்தால் உத்தரவிடப்பட்டும் எந்தவித முன்னறிவிப்புமின்றி இன்று அவர் ஆணையத்தில் ஆஜராகவில்லை. ஆணையத்தின் உத்தரவினை மதிக்காமல் ஆஜராகாமல் இருந்தது கண்டனத்திற்குரிய செயலாகும். ஆஜரான பொது தகவல் அலுவலர் ஆக்கிரமிப்புகளை அகற்றி அதனுடைய தகவலை மனுதாரருக்கு 30.05.2025 அன்று நேரிலும், பதிவு அஞ்சல் மூலமாகவும் அனுப்பி அதனுடைய ஒப்புகை அட்டையினை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார்.

உத்தரவினை நிறைவேற்றி அதனுடைய புகைப்படத்தினை தாக்கல் செய்ததனை ஏற்றுக்கொண்டு இந்த மனுமீதான நடவடிக்கை முற்றாக்கம் செய்யப்படுகிறது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**வழக்கு எண். SA 136/B/2023**

1. பொதுத் தகவல் அலுவலர்,
   துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்),
   ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகம்,
   விருதுநகர் மாவட்டம் - 626 125.

2. வட்டார வளர்ச்சி அலுவலர்,
   ஸ்ரீவில்லிப்புத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
   விருதுநகர் மாவட்டம்.

3. வட்டாட்சியர்,
   ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம்,
   விருதுநகர் மாவட்டம்.

4. வருவாய்த்துறை ஆய்வாளர்,
   ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம்,
   விருதுநகர் மாவட்டம்.

5. நிலஅளவையர்,
   ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம்,
   விருதுநகர் மாவட்டம்.

6. கிராம நிர்வாக அலுவலர்,
   ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம்,
   விருதுநகர் மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**

திரு. அ. தமிழ்ராஜ் த/பெ. அந்தோணி (எ) திருப்பதி,
எண்.10/2, N. சண்முகசுந்தரபுரம்,
மீனாட்சிபுரம் அஞ்சல்,
ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம்,
விருதுநகர் மாவட்டம்.
செல்.9443867429.

Copy to: File. GP PC